# உடலுறுப்பு மாற்றமும் இஸ்லாமிய பிக்ஹ் நிறுவனங்களின் பத்வாக்களும்: இஸ்லாமிய சட்ட அடிப்படைகளை மையப்படுத்திய ஆய்வு

# Organ Transplantation and Fatwas of Islamic Fiqh Academies: Study Based on Islamic Legal Maxims

I. Saujan[2] & S.M.M. Mazahir[2]

[1,2]Department of Islamic Studies, Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka- Oluvil
saujaniqbal95@gmail.com, mazahirsmm@seu.ac.lk

## Abstract

Organ transplantation means the process of getting rid of the disease by placing the organs in the body of a recipient struggling to survive and the organs can be transplanted either from a living or a deceased donor. Ijtihad on organ transplantation has been made by the Islamic Scholars as individual or in combination and Fatwas have been submitted. the research has been carried out on the basis of the objectives such as examining the aforesaid fatwas in keeping with legal maxims and enlightening the Sri Lankan Muslims about how Shariah focuses on organ transplantation. This research can be known as a library Research in respect of Qualitative Method. Data were gathered from the secondary sources such as research Articles, web publications, newspapers and books, the Islamic sources namely Al-Qur'an, Sunnah and opinions of the contemporary Islamic Scholars and fatwas of International Islamic Fiqh Academies. All the received data were analyzed through Data analytical method and the information were organized and forwarded. According to the results of the study, A Sri Lankan Common Law has permitted the Muslims living in the prevailing circumstances in Sri Lanka to the Act of transplanting organs and the research perform in conclusion has it that all the fatwas addressed by Islamic fiqh academies that are in operation in the Countries like Singapore, Malaysia, America and India are authentic based on Islamic Legal Maxims.

**Key Words:** Organ Transplantation, Islamic Fiqh Academies, Fatwas, Islamic Legal Maxims

## ஆய்வுப்பின்னணி (Background of the Study)

அல்லாஹ் மனிதர்களை படைத்து அவர்களுக்கு வழிகாட்டுவதற்காக காலத்துக்கு காலம் வேதங்களையும், தூதர்களையும் அனுப்பிவைத்தான். இதன் தொடரில் இறுதியாக இறக்கப்பட்ட அல்குர்ஆனும், இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் வழிகாட்டுதலான ஸுன்னாவும் இஸ்லாமிய சட்டவியலின் (Islamic Law) அடிப்படை மூலாதாரங்களாக நோக்கப்படுகின்றன. 16ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட அறிவியல் ஆராய்ச்சி, புதிய கண்டுபிடிப்புகள், நவீன தொழிநுட்பத்தின் வளர்ச்சி, பூகோள மயமாக்கல், கைத்தொழில் மயமாக்கல் போன்றன காரணமாக நபி (ஸல்) அவர்களின் காலத்தில் தோன்றிடாத புதிய

பிரச்சினைகள் அரசியல், பொருளாதாரம், மருத்துவம் போன்ற துறைகளில் தோற்றம் பெற்று இஸ்லாமிய மார்க்கத் தீர்ப்புகளை வேண்டி நின்றன. இக்காலத்தில் துணை மூலாதாரங்களின் பால் இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் தமது கவனத்தை குவித்தனர். அவ்வாறு பயன்படுத்தப்பட்ட துணை சட்ட மூலங்களாக தனி நபர், கூட்டு இஜ்திஹாத், கியாஸ், மஸ்லஹா முர்ஸலா, இஸ்திஹ்ஸான், உர்பு, மகாஸித் ஷரீஆ, கவாயித் அல் பிக்ஹிய்யா போன்றன காணப்பட்டன. நவீன இஸ்லாமிய சட்டப் பிரச்சினைகள் இம்மூலாதாரங்களின் துணைக்கொண்டு தீர்வுகாணப்பட்டு வருகின்றன.

இன்றைய மருத்துவ உலகம் பல முன்னேற்றங்களை அடைந்துள்ளது. அதன் ஒரு வடிவமே உடலுறுப்பு மாற்றமாகும். மருத்துவத் துறையில் மேற்கொள்ளப்படும் உடலுறுப்பு மாற்றம் நோய்களை குணப்படுத்துவதற்கான ஒரு சிகிச்சை முறையாகும். இச்சிகிச்சை மூன்று விதங்களில் இடம்பெறுகின்றது.

1. Autotransplants: - திசுக்கள், உடலுறுப்புக்களை ஒரு மனிதனின் உடலின் குறித்த ஒரு பகுதியிலிருந்து அதே மனிதனின் உடலின் மற்றும் ஒரு பகுதிக்கு மாற்றுவதை குறிக்கிறது.
2. Allotransplants: ஒரு மனிதனிடம் இருந்து அல்லது ஒரே இனத்தைச் சேர்ந்த இரு வேறுபட்ட இனங்களுக்கு இடையில் உறுப்புக்களை மாற்றுவதை குறிக்கிறது - இன்று இடம்பெறுகின்ற அதிகமான உடலுறுப்பு மாற்றங்கள் இவ்வகையைச் சார்ந்ததாகும்.
3. Xenotransplants: மனித உடலில் உயிருள்ள செல்கள், திசுக்கள், உறுப்புக்கள் அல்லது மனிதனல்லாத விலங்கிலிருந்து பெறப்படும் உறுப்புக்கள், செல்கள், திசுக்கள் போன்றவற்றை வேறுபட்ட இரு இனங்களுக்கிடையே மாற்றம் செய்தல் (Bakari, 2012)

இவ்வாய்வு “Allotransplants” வகையைச் சார்ந்த உறுப்பு மாற்று சிகிச்சையுடன் மாத்திரம் சுருங்கிக் கொள்கிறது. இவ்வகை உறுப்புமாற்றம் உறுப்பை வழங்கும் (Donor) மற்றும் பெற்றுக் கொள்ளும் (Recipient) நபரின் தன்மைக்கு ஏற்ப மூன்று வகைப்படுகின்றது. 1. ஆரோக்கியமான நபரிடமிருந்து நோயுற்ற நபருக்கு சிறுநீரகம், கல்லீரல் போன்ற உறுப்புக்களை மாற்றம் செய்தல். 2. இறந்த உடலிலிருந்து நோயுற்ற நபருக்கு விழித்திரை, தோல், எலும்பு, இதய வால்வு போன்ற உறுப்புக்களை மாற்றம் செய்தல். இவ்வாறு மாற்றம் செய்யும் போது உடலிலிருந்து உயிர் பிரிந்து ஆறு மணி நேரத்திற்குட்பட்ட கால இடைவெளியில் விழித்திரைகள் மாற்றீடு செய்யப்படுதல் வேண்டும். (ர்யஅனலஇ 2014) 3.மூளைச்சாவு (Brain Deth) அடைந்த ஒருவரின் சிறுநீரகங்கள், நுரையீரல், குடல், இதயம், கணையம், கல்லீரல், கண்கள் (கார்னியா-Cornea), விழித்திரை போன்ற 37 உறுப்புக்களும், திசுக்களும் மாற்றம் செய்யப்படுகின்றன.

உலகில் உள்ள எல்லா படைப்புகளை விடவும் மனிதனை அல்லாஹ் கண்ணியமானவனாகவும், சிறப்புக்குரியவனாகவும் படைத்துள்ளான். மனிதனுக்கு நோய்கள் ஏற்பட்டால் உலகில் உள்ள அனைத்து படைப்புகளிலிருந்தும் நோய் நிவாரணியை (மருந்து) எடுத்துக்கொள்ள முடியும். நிர்பந்த நிலையில் இறந்தவற்றை கூட உண்பதற்கு ஷரீஆ அனுமதி வழங்குகியுள்ளது. *“எவரேனும் பாவம் செய்யாத நிலையில் - வரம்பு மீறாமல் (இவற்றை உண்ண) நிர்ப்பந்திக்கப்பட்டால் அவர் மீது குற்றமில்லை. நிச்சயமாக அல்லாஹ் கருணைமிக்கோனும், மன்னிப்பவனுமாக இருக்கின்றான்.” (அல்-குர்ஆன்2:173)* ஆனால்,

ஏனைய உயிரினங்கள் மனிதனுடைய எப்பகுதியையும் பயன்படுத்த முடியாது. அவ்வாறு பயன்படுத்த நவீன விஞ்ஞானம் முயற்சித்து அது தோல்வியில் முடிவடைந்துள்ளமை நிதர்சன உலகின் உண்மையாகும். இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு மரபனுமாற்று தொழின் நுட்பமாக்கம் (Genetic engineering technology). மனிதனுக்கு மனிதன் உதவி செய்வதை இஸ்லாம் வலியுறுத்திக் கூறியுள்ளது. *''இறை நம்பிக்கையாளர்கள் அனைவரும் சகோதரர்கள்'' (அல்குர்ஆன்:49:10)* என அல்-குர்ஆன் குறிப்பிடுகின்றது. மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் *''மு.்.மின்கள் அனைவரும் ஒரே உடலைப் போன்றவர்கள்'' (முஸ்லிம்: 1999, புஹாரி:2586).* ஒருவருக்கு ஒருவர் உதவி செய்வது எல்லா தரப்பினரிடமும் பாராட்டத்தக்க செயலாகும்.

உலக வரலாற்றில் முதல் உடலுறுப்பு மாற்றம் 1850ஆம் ஆண்டு உயிருள்ள (Living Donor) ஒரு மனிதனின் உடலிலிருந்து மற்றும் ஒரு உயிருள்ள மனிதனின் உடலுக்கு திசு (Tissue) மாற்று சிகிச்சை இடம்பெற்றது. (ர்யஅடைவழஜெ 2012) இஸ்லாமிய வரலாற்றிலும் இவ்வுறுப்பு மாற்று சிகிச்சை இடம்பெற்றமைக்கான வரலாற்று சான்றுகள் உள்ளன. இஸ்லாமிய வரலாற்றில் இடம்பெற்ற பத்ர் யுத்தத்தில் முவாத் இப்னு அரப் மற்றும் ஹபீப் பின் யஸாப் ஆகியோர்களின் கைகள் நபியவர்களால் உறுப்பு மாற்றம் செய்யப்பட்டது. மேலும் உஹது யுத்தத்தில் கதாதா இப்னு நு.்.மான் என்பவரின் ஒரு கண் பாதிப்புக்குள்ளாகவே நபி (ஸல்) அவர்கள் அதற்கு பகரமாக இன்னும் ஒருவரின் கண்ணை மாற்றீடு செய்தார்கள் (யுடடியசஇ 2012). உறுப்புமாற்றம் பற்றிய வரலாறுகளில் இஸ்லாமிய வரலாறு காலத்தால் முற்பட்டதாகும்.

1950இல் உடலுறுப்பு மாற்றம் பற்றிய ஷரீஆவின் நிலை தொடர்பில் இஸ்லாமிய உலகின் சட்ட அறிஞர்களுக்கு மத்தியில் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றதுடன் இதற்கு அங்கீகாரம் வழங்குவது தொடர்பில் பல அறிஞர்களினால் தனியாகவும் கூட்டாகவும் இஜ்திஹாத் மேற்கொள்ளப்பட்டு, மார்க்க தீர்ப்புகள் முன்வைக்கப்பட்டன. இவ்வாறு முன்வைக்கப்பட்ட மார்க்க தீர்ப்புக்களை இஸ்லாமிய சட்ட அடிப்படைகளின் துணை கொண்டு பரிசீலிப்பதை முதன்மை நோக்கமாகவும், இலங்கை முஸ்லிம்களுக்கு மத்தியில் உடலுறுப்பு மாற்றம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை துணை நோக்கமாகவும் கொண்டு ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை (Research Problem)**

உடலுறுப்பு மாற்றம் என்பது உயிருள்ள உடலிலிருந்தோ, இறந்த உடலிலிருந்தோ அல்லது மூளைச் சாவு அடைந்த ஒருவரின் உடலிலிருந்தோ உறுப்புக்களைப் பெற்று உயிர்வாழ போராடிக் கொண்டிருக்கும் மனிதனில் அதை பொருத்தி குறித்த நபரை நோயிலிருந்து விடுபடச் செய்யும் செயற்பாடாகும். (டீயமயசஜை 2012) மருத்துவத் துறையில் இதன் தேவை உலக முன்னணி நாடுகளால் உணரப்பட்டுள்ளது. அமெரிக்காவில் மாத்திரம் உடலுறுப்பு கிடைக்காமையால் தினம் தோறும் 20 நபர்கள் உயிரிழப்பதாக "Health Resource & Services Administration" என்னும் அமைப்பு தெரிவிக்கின்றது. (யுனஅைளைவசயவழைெ 2020) மேலும், உலக சுகாதார தாபனத்தின் அறிக்கையின் படி (The World Health Organization (WHO)-2019) "தினம் தோறும் உலக மக்களில் 60 நபர்களுக்கு உறுப்புமாற்று சிகிச்சை

இடம் பெறுவதுடன் 13 நபர்கள் உறுப்புக்கள் கிடைக்காமையால் மரணமடைவதாக குறிப்பிடுகிறது.'' (ஞாஐஅயணழெயஇ 2019) சிங்கப்பூரில் பருவ வயதை அடைந்தவர்களும், 21 வருடங்களுக்கு மேல் குடியுரிமை பெற்று வாழும் வெளிநாட்டவர்களும் மரணத்தின் பின் சிறுநீரகம், கல்லீரல், நுரையீரல், இதயம், கணையம் போன்ற உறுப்புக்களை வழங்குவதை "The Human Organ Transplantation Act" இன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஏயனலளஸைபொந யு.ஐே 2018) பிரித்தானியா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் மாதம் ஒன்றில் 398 உறுப்புமாற்று சிகிச்சைகள் இடம்பெறுவதாக அந்நாட்டு மருத்துவ அறிக்கை தெறிவிக்கின்றது. இது இலங்கையுடன் ஒப்பிடும் போது 1:52,477 என்ற விகிதமாகும். (ஏயனலளஸைபொந யு.ஐே 2018) மேலும் இலங்கையில் வருடம் தோறும் 2000க்கு மேற்பட்ட மக்கள் உறுப்புக்கள் கிடைக்காமையால் உயிரிழப்பதாக மருத்துவ அறிக்கை குறிப்பிடுகின்றது. (ஏயனலளஸைபொந யு.ஐே 2018)

இலங்கையில் உடலுறுப்பு மாற்றத்திற்கு சட்ட அங்கீகாரம் வழங்கும் நோக்கில் 1987ஆம் ஆண்டு 48ஆம் இலக்க மனித திசு மாற்று சட்டம் (Transplantation of Human Tissue (THT) Act No 48 of 1987) கொண்டுவரப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இச்சட்டம், உறுப்புதானம் வழங்குபவரின் உயிர் பாதுகாப்பு, பாதுகாப்பான அறுவை சிகிச்சை முறை, உறுப்பு வியாபாரத்தை (Organ Trafficing) தடைசெய்தல் போன்ற சட்ட ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. இவ்வாறு பல முன்னேற்றகரமான ஏற்பாடுகள் இச்சட்டத்தில் உள்ளபோதிலும் சிங்கபூர் நாட்டில் உள்ள சட்டத்தைப் போன்று உறுப்பு மாற்றத்தை கட்டாயப்படுத்த தவறியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இப்பின்னணியில் இலங்கை முஸ்லிம்களுக்கு இது தொடர்பில் விழிப்புணர்வூட்டி உலகின் முன்னணி பிக்ஹ் நிறுவனங்களினால் முன்வைக்கப்பட்ட பத்வாக்களை இஸ்லாமிய சட்ட அடிப்படைகளின் துணை கொண்டு பரிசீலிப்பது காலத்தின் தேவையாக ஆய்வாளர்களினால் உணரப்பட்டமையே இவ்வாய்வின் மையமாகும்.

**இலக்கிய மீளாய்வு (Literature Review)**

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட தலைப்புடன் தொடர்புடைய ஆய்வுகளை தேடலுக்கு உட்படுத்தியபோது உலக அரங்கில் பல ஆய்வுகள் இடம் பெற்றுள்ளமையை அறிய முடிந்தது. இதற்கு மாற்றமாக, இலங்கைச் சூழலை மையப்படுத்தி இவ்வாறான ஆய்வுகள் பற்றாக்குறையாக உள்ளமை இலக்கியத் தேடலின்போது அறிய கிடைத்தது. தலைப்புடன் தொடர்புடைய பொதுவான சில ஆய்வுகள் வாசிப்புக்குட்படுத்தப்பட்டன. அவற்றில் சில பின்வருமாறு

Mohammed Albar, (2012). "Organ Transplantation: A Sunni Islamic Perspective" இவ்வாய்வுக் கட்டுரை "Saudi Journal of Kidney Diseases and Transplantation" என்னும் சஞ்சிகையில் 2012ம் ஆண்டு வெளியிடப்பட்டது. ஆய்வின் நோக்கம் "மருத்துவ நோக்கத்தில் உடல் உறுப்புக்கள் மாற்றம் செய்வதில் ஸுன்னி அறிஞர்களின் நிலையைக் கண்டறிவதாகும்.'' ஆய்வின் பெறுபேறாக, பெரும்பாலான ஸுன்னி அறிஞர்கள் உறுப்பு மாற்றத்தை அனுமதிப்பதுடன் இது தொடர்பில் சில நிபந்தனைளையும் விதித்துள்ளனர் என்பது கண்டறியப்பட்டது. இவ்வாய்விலிருந்து தலைப்புடன் தொடர்புடைய இஸ்லாமிய

சட்டமூலாதாரங்களின் ஆதாரங்கள், வரலாற்று நிகழ்வுகள் போன்ற தகவல்கள் பெறப்பட்டன. தலைப்புரீதியாக இவ்வாய்வு இயைந்து செல்கின்ற போதிலும் ஆய்வு முறையியல் மற்றும் ஆய்வின் நோக்கம் போன்ற அம்சங்களில் வேறுபட்டுள்ளது.

Dilshan Priyankara, Makarim Mohamed, Krishakeesen Kamalanthan & Edirisooriya Maddumage Manaj, (2019), "Pulich Knowledge on Brain Deth and Organ Donation in a Selected Sri Lankan Population" என்னும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வு "இலங்கை மக்களிடையே மூளைச்சாவு (Brain Deth) மற்றும் உடலுறுப்பு தானம் (Organ Donation) பற்றிய அறிவு நிலையை மதிப்பீடு செய்தல்" என்னும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. 2017, 2018 வருடங்களில் கொழும்பில் இடம்பெற்ற மருத்துவக் கண்காட்சியில் கலந்து கொண்ட 16 வயதுக்கு மேற்பட்ட பார்வையாளர்களிடம் வினாகொத்துக்கள் வழங்கப்பட்டு தரவுகள் திரட்டப்பட்டன. இது "Snowball Sampling Method" முறையிலமைந்த தகவல் திரட்டாகும். ஆய்வின் பிரதான கண்டறிதல்களாக 80% மேற்பட்ட மக்களிடம் மூளைச்சாவு தொடர்பான அறிவு காணப்படுகின்றது, 97.8% நபர்களிடம் உறுப்பு தானத்தின் மூலம் உயிர்களைக் காப்பாற்ற முடியும் என்ற அடிப்படை அறிவு காணப்படுகின்றது, 90.5% ஆன நபர்கள் உறுப்பு தானம் செய்வதில் விருப்பம் கொண்டுள்ளனர், ஆனால் 19% ஆனவர்கள், அவர்களின் குடும்பத்தில் இருந்தே உறுப்புதானம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 43.5% ஆனவர்கள் கண், சிறுநீரகம், கல்லீரல், நுரையீரல், இதயம், கணையம் போன்ற உறுப்புக்களை தானமாக வழங்க முடியும் என்பதை அறிந்துள்ளனர். ஆய்வின் முடிவில் "மக்களிடம் உறுப்பு மாற்றம், உறுப்பு தானம் தொடர்பான அறிவு காணப்படுகின்ற போதிலும் செயற்பாட்டுரீதியாக மக்கள் பங்கு பற்றாமை ஒரு குறைப்பாடாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. குறித்த இவ்வாய்வு ஆய்வுத்தலைப்பு, நோக்கம், விடயப்பரப்பு போன்ற அம்சங்களில் இவ்வாய்விலிருந்து வேறுபட்டுள்ளது. மேலும் ஆய்வுப்பிரச்சினையை தெளிவுபடுத்துவதற்கு தேவையான இலங்கை மக்களின் அறிவுநிலை பற்றிய தரவுகள் பெறப்பட்டன.

Vadysinghe A.N, Dassanayaka P.Ba, Edussuriya D.H & Rukshana MJF, (2018), "Tissue Donation and Trasplantation Program in Sri Lanka: A Medio-Legal Point of View" என்னும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வு "இலங்கையில் திசு தானம் மற்றும் உடலுறுப்பு மாற்றம் என்பவற்றுடன் தொடர்புடைய மருத்துவச் சட்டங்களையும், நெறிமுறைகளையும் விமர்சன மதிப்பீடு செய்தல், உள்ளுர் சட்ட ஏற்பாடுகளை வெளிநாட்டு சட்டங்களுடன் ஒப்பீடு செய்து தேவையான ஆலோசனைகளை முன்வைத்தல்" என்னும் நோக்கில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வில் இலங்கையில் நடைமுறையில் உள்ள "மனித திசு மாற்றச் சட்டம் (Transplantation of Human Tissue (THT) Act No 48 of 1987)" மற்றும் ஐக்கிய அமெரிக்காவில் நடைமுறையில் உள்ள " வுாந ருகைழசஅ னுநவநசஅiயெவழைெ ழக னுநயவா யுஉவ- 1981" இடையிலான ஒப்பீட்டு ஆய்வாக (Comparative Study) அமைந்துள்ளது. ஆய்வின் முடிவில் இலங்கையில் நடைமுறையில் உள்ள சட்டங்களும்,

நெறிமுறைகளும் ஐக்கிய அமெரிக்காவில் நடைமுறையில் உள்ள சட்டங்களுக்கும், நெறிமுறைகளுக்கு அமைவாக மாற்றியமைப்பதன் மூலம் இலங்கையில் உறுப்பு தானம், உறுப்பு மாற்றம் தொடர்பில் மக்கள் பங்கு பற்றுதலை அதிகரிக்க முடியும் என்னும் பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாய்விலிருந்து சில சட்டத் தகவல்களும், தரவுத்தகவல்களும் பெற்றுக்கொள்ளப்பட்டன. குறித்த ஆய்வு நோக்கம், ஆய்வுப்பரப்பு, தலைப்பு, ஆய்வுப்பிரச்சினை, முறையியல் போன்ற விடயங்களில் வேறுபட்டிருந்தாலும் உடலுறுப்பு மாற்றம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு என்றவகையில் இயைந்து செல்கின்றது.

டீயமயசை, A. Bakari, (2012). “Organ Transplantation: Legal, Ethical and Islamic Perspective in Nigeria.” என்னும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு “உறுப்பு மாற்று மற்றும் அறுவை சிகிச்சை தொடர்பான சட்ட, நெறிமுறைச் சிக்கல்களை அடையாளம் காணல், நைஜீரியாவில் உள்ள உறுப்பு மாற்று சட்டத்தை மதிப்பீடு செய்தல், அறுவை சிச்சையில் தோன்றும் சட்ட, மத மற்றும் நடைமுறை சிக்கல்களை விமர்சன பகுப்பாய்வு செய்தல்” போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவில் குறித்த உறுப்பு மாற்றுச் செயன்முறை உயிருக்கான போராடும் நோயாளியைக் குணப்படுத்துவதற்கான சிகிச்சை முறையாகும், இருப்பினும் குறித்த முறை இன்று வியாபாரமாக மாறிக் கொண்டிருக்கின்றது. இதனை தடைசெய்யும் விதமாக சட்டத்தில் இறுக்கமான சட்ட ஏற்பாடுகள் கொண்டுவரப்படல் வேண்டும். மேலும் மக்களின் பங்குபற்றுதலை அதிகரிக்கச் செய்ய மதம், கலாசாரம், மருத்துவம் சார் அறிவூட்டல்கள் வழங்கப்படல் வேண்டும் என்னும் முன்மொழிவும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாய்விலிருந்து ஆய்வுப் பிரச்சினை தொடர்பான அணுகுமுறை பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், ஆய்வுடன் தொடர்புடைய தகவல்களும் பெற்றுக் கொள்ளப்பட்டன. குறித்த ஆய்வு இவ்வாய்விலிருந்து நோக்கம், ஆய்வுப்பரப்பு, தலைப்பு, ஆய்வுப்பிரச்சினை, முறையியல் போன்ற விடயங்களிலிருந்து வேறுபட்டுள்ளது.

Mostafa.M, (2008). “Profiling Organ donors in Egypt using intelligent modeling techniques” என்னும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வின் நோக்கம் “உறுப்பு தானத்தில் எகிப்திய மக்கள் தொகை, அறிவாற்றல், உளவியல் காரணிகளின் செல்வாக்கை கண்டறிதல்” என்பதாகும். ஆய்வின் முடிவில் “artificial neural networks outperform traditional statistical techniques” இன் செல்வாக்கு ஆய்வுமாதிரிகளிடம் அதிகரித்துக் காணப்படுவது கண்டறியப்பட்டது. இவ்வாய்வு ஆய்வுமுறையியல், நோக்கம், தலைப்பு, ஆய்வு எல்லை போன்ற விடயங்களின் வேறுபட்டுள்ள போதிலும் ஆய்வுடன் தொடர்புடைய சில மருத்துவத் தகவல்கள் உறுப்பு மாற்றம் செய்ய முடியுமான உறுப்புக்கள், மாற்றம் செய்யும் முறை, மாற்றம் செய்வதற்கான மருத்துவ நெறிமுறைகள் போன்ற தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன.

**ஆய்வு முறையியல் (Research Methodology)**

இவ்வாய்வு பண்புசார் (Qualitative) முறையிலமைந்த நூலக ஆய்வாகும் (Library Research). இவ்வாய்வில் இரண்டாம் நிலை தரவு மூலங்களான ஆய்வுக் கட்டுரைகள், இணைய வெளியீடுகள், பத்திரிகைகள், புத்தகங்கள் போன்றவற்றிலிருந்து தரவுகள் திரட்டப்பட்டன. இவற்றில் மலேசியாவில் இயங்கும் Malaysia Department of Islamic Development (JAKIM), (2011) இனால் ‘‘Organ and transplantation from the Islamic perspective’’ என்னும் தலைப்பில் வெளியிடப்பட்ட கையேட்டிலிருந்து ஆய்வுக்குத் தேவையான பிக்ஹ் நிறுவனங்களின் பத்வாக்கள் பெறப்பட்டன. மேலும் ‘‘The fiqh of Organ Transplantation and its Application in Singapore, (2011)’’ என்னும் அமைப்பினால் ‘‘Organ and Transplantation in Islam’’ என்னும் தலைப்பில் வெளியிடப்பட்ட நூலிலிருந்தும் சில கோட்பாட்டு தகவல்கள் பெறப்பட்டன. ஆய்வுடன் தொடர்புடைய சட்ட அடிப்படைகளை (Legal Maxims) பெற்றுக் கொள்வதற்காக ‘‘அப்துல் அல்-அஸீஸ் முஹம்மத் அஷாமி’’ என்பவரால் எழுதப்பட்ட ‘‘அல் கவாயித் அல்-பிக்ஹிய்யா’’ என்ற நூலிலிருந்து ஐம்பெரும் காயிதாக்களும், அவற்றின் கிளைக் காயிதாக்களும் பெறப்பட்டன. அறபு மொழியில் பெறப்பட்ட காஇதாக்களை தமிழ் மொழியில் மொழிமாற்றம் செய்யும் போது எழுத்து வடிவிலும், ஒலி வடிவிலும் முரண்பாடுகள் ஏற்படுவதை தவிர்ப்பதற்காக MCS. Sathifa, SMM. Mazahir & MASF. Saadiyya ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட ‘‘அறபு ஒலிகளுக்கான தமிழ் வரிக் குறியீடுகளை உருவாக்குதல்’’ என்னும் ஆய்வின் வழிகாட்டுதல்கள் பயன்படுத்தப்பட்டது. (ஆஊளு. ஞாயவாகையஇ 2015) பெறப்பட்ட தரவுகள் அனைத்தும் தரவுப் பகுப்பாய்வு முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு தகவல்கள் ஒழுங்குபடுத்தப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளன.

**கலந்துரையாடலும் பெறுபேறுகளும் (Discussion and Results)**

**01. இஸ்லாம் மற்றும் உடலுறுப்பு மாற்றம் (Islam and Organ Transplatation)**

‘‘உஸாமா இப்னு ஷரீக் அறிவிக்கிறார். நாட்டுப்புற அரபிகள் சிலர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து ‘‘யா ரஸூலுல்லாஹ்! நாங்கள் மருந்துகளைக் கொண்டு நோய்களைக் குணப்படுத்திக் கொள்ளட்டுமா? என கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் ‘‘ஆம்! இறைவனின் அடியார்களே! மருந்துகளை பயன்படுத்துங்கள். நிச்சயமாக அல்லாஹ் நிவாரணி இன்றி நோய்களை ஏற்படுத்துவதில்லை. ஒரு நோயைத் தவிர.’’ ‘‘அது என்ன? இறைவனின் தூதரே’’ ‘‘அது முதுமை ஆகும்’’ என பதிலளித்தார்கள்.’’ *(அபூதாவூத்: 2015,3855)*

இறைத்தூதரின் ஆதாரபூர்வமான ஹதீஸிலிருந்து நோய்களைக் குணப்படுத்துவதற்காக மருந்துகளைப் பயன்படுத்த முடியும், முதுமை அடைதல் தவிர ஏனைய நோய்களுக்கு பொருத்தமான நோய் நிவாரணிகள் இறைவனால் உருவாக்கப்பட்டுள்ளன என்ற முன்னறிவிப்பும் தெளிவாகின்றது. இன்றைய நவீன மருத்துவ உலகம் உடலுறுப்பு மாற்றம் நோய்களைக் குணப்படுத்துவதற்கான ஒரு மருத்துவ சிகிச்சை என்பதை ஏற்றுக் கொண்டுள்ளது.

உறுப்பு மாற்றத்தின் ஷரீஆ அங்கீகாரம் தொடர்பான தெளிவான ஆதாரங்கள் அடிப்படைச் சட்டமூலாதாரங்களில் குறிப்பிடப்படவில்லை. மேலும் மத்ஹப் அறிஞர்களுக்கு மத்தியிலும் இது குறித்து தெளிவான கருத்துக்கள் எதையும் காணமுடியவில்லை. இதற்குக் காரணம்

உறுப்பு மாற்றம் நவீன கால கண்டுபிடிப்பாக இருப்பதோடு இது தொடர்பான கருத்துக்கள் அண்மைக் காலத்தில் விவாதிக்கப்பட்டு வருகின்றமையுமாகும். நவீன மருத்துவ வளர்ச்சியில் உறுப்புமாற்றத்தின் ஏற்புடைமை தொடர்பாக முதன் முதலாக 1950ஆம் ஆண்டு மலேசியாவில் விவாதிக்கப்பட்டது. ((Mishkah), 2013) இதனைத் தொடர்ந்து 1960, 1965ஆம் ஆண்டுகளில் திசு, இதயமாற்றுக்கு அனுமதி அளிக்கும் பத்வாக்கள் இஜ்திஹாத் அடிப்படையில் முன்வைக்கப்பட்டன. இது தொடர்பாக கலாநிதி யூசுப் அல் கர்ளாவி அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றார். *''உடலுறுப்பு மாற்றிகான இஜ்திஹாதின் வாயில் எப்போதும் திறந்தே உள்ளது. இதற்குக் காரணம் பாரம்பரிய இஸ்லாமிய அறிஞர்களினால் தீர்வு முன்வைக்கப்படாத, நவீன காலத்தில் தோற்றம் பெற்ற ஓர் அம்சமாக உள்ளமையாகும்.'' (Yusuf al Qaradawi, 1995)*

உறுப்பு மாற்று சிகிச்சை நோயாளியின் உயிரை காப்பதற்கான இறுதித் தெரிவாகவும், நோயாளி உயிருக்காக போராடிக் கொண்டிருக்கும் நிர்ப்பந்த நிலையிலும் மாத்திரமே இஸ்லாம் இதனை அனுமதிக்கிறது என்பதே பிக்ஹ் நிறுவனங்களின் பொதுவான நிலைப்பாடாகும். உயிருடன் உள்ள ஒரு நபரிடமிருந்து உறுப்புகள் பெறப்படுமாயின் உறுப்பு வழங்கும் நபரின் உயிருக்கு உத்தரவாதம் நிபுணத்துவம் பெற்ற மருத்துவர்களால் வழங்கப்பட வேண்டும். இறந்த உடலிலிருந்து உறுப்புகள் பெறப்படும் போது குறித்த நபரிடமிருந்து முன் அனுமதி பெறப்பட்டிருத்தல் அல்லது நெருங்கிய உறவினர்களிடமிருந்து அனுமதி பெறப்பட்ட பின்னரே உறுப்பு மாற்று சிகிச்சை மேற்கொள்ளப்படல் வேண்டும். பொதுவாக இம்மாற்றத்திற்கான ஷரீஆ மற்றும் பிக்ஹ் நிறுவனங்களின் பத்வாக்களை பின்வரும் இஸ்லாமிய சட்ட அடிப்படைகளை (Legal Maxims) கொண்டு விளங்கிக் கொள்ள முடியும்.

**I. அல்-உமூறு பிமகாஸிதிஹா (செயல்கள் அனைத்தும் நோக்கங்களைக் கொண்டே தீர்மானிக்கப்படும்)**

''செயல்கள் அனைத்தும் நோக்கங்களைக் கொண்டே தீர்மானிக்கப்படும்.'' உறுப்பு மாற்றம் மேற்கொள்வதன் முதன்மை நோக்கம் நோயாளியின் உயிரைக் காப்பதாகும். இதற்கு மாற்றமாக, வியாபார நோக்கமாகவோ ஏனைய நோக்கங்களுக்காகவோ மேற்கொள்ளப்படும் உறுப்புமாற்று சிகிச்சைகளை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கிறது. இன்றைய உலகில் சட்டத்திற்கு முரணான உறுப்பு மாற்றங்கள் இடம்பெற்று உறுப்புமாற்றத்தின் உண்மையான நோக்கம் கலங்க படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஸ்கார்ட் கார்ணி என்ற அமெரிக்க பத்திரிகையாளர் ''The Red Market'' என்ற நூலில் ''உலகம் முழுவதும் மனித உறுப்புகளின் களவு, விற்பனை, மோசடி என்பன இடம்பெறுகின்றன. குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளில் வாழும் ஏழை மக்களை ஏமாற்றி அவர்களின் உடல் பாகங்கள் திருடப்படுகின்றன'' என குறிப்பிடுகின்றார். (ஜுழரளரகஙை 2016) இஸ்லாமிய ஷரீஆவின் இலக்குகளில் ஒன்றாக ''உயிர் பாதுகாக்கப்படல்'' காணப்படுகின்றது. மேலும் இறைவார்த்தையின் படி ஒரு உயிரைப் பாதுகாப்பது முழு சமூகத்தையும் பாதுகாப்பதற்கு நிகரான நன்மைகள் கிடைக்கும் உன்னத செயலாக இஸ்லாம் கருதுகின்றது. இதனை பின்வருமாறு அல் குர்ஆன் கூறுகின்றது.

*''எவரொருவர் ஓராத்மாவை வாழ வைக்கிறாரோ அவர் மக்கள் யாவரையும் வாழ வைப்பவரைப் போலாவார்'' என்று இஸ்ராயீலின் சந்ததியினருக்கு விதித்தோம். மேலும், நிச்சயமாக நம் தூதர்கள் அவர்களிடம் தெளிவான அத்தாட்சிகளைக் கொண்டு வந்தார்கள். இதன் பின்னரும் அவர்களில் பெரும்பாலோர் பூமியில் வரம்பு கடந்தவர்களாகவே இருக்கின்றனர்.'' (அல்-குர்ஆன் 5:32)*

**II. அல்-லறர் யுஸாலு (தீங்கு நீக்கப்படல்)**

இஸ்லாமிய சட்டவியலின் நோக்கங்களில் ஒன்றாக தீங்கு நீக்கப்படல் காணப்படுகிறது. உறுப்பு மாற்று சிகிச்சையில் நோயாளிக்கு மரணத்தைக் கொண்டுவரும் தீங்கு நீக்கப்படுவதற்காக உயிருடன் இருக்கும் நபரின் அல்லது இறந்த உடலின் உறுப்புக்கள் பயன்படுத்தப்படுகின்றன.

"இரண்டு தீங்குகள் இருக்கும் போது அவற்றில் குறைந்த தீங்கினைத் விளைவிக்கக் கூடிய தீங்கைத் தெரிவுசெய்தல்" எனும் சட்டவிதிக்கு அமைவாக இங்கு உறுப்புமாற்றம் மற்றும் நோயாளி மரணத்தைத் தழுவுதல் என்னும் இரண்டு தீங்குகள் உள்ளன. இவற்றில் உறுப்புமாற்றம் என்பது குறைவான பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய தீங்காக இருப்பதுடன் உறுப்புதானம் செய்பவர் உயிர்வாழ்வதற்கான உத்தரவாதம் உள்ளமையினாலும் இதனைத் தெரிவு செய்வது பொருத்தமானதாக அமையும்.

**III. அல்-மஷக்கா தஜ்லிபுத் தய்ஸீர் (கஷ்டம் இலகுவைக் கொண்டுவரும்)**

இச்சட்ட அடிப்படையில் உறுப்புமாற்று சிகிச்சை மரணத்தின் வாயலில் உள்ள நோயாளியின் கஷ்டத்தை நீக்கி இலகுவை கொண்டுவருவதற்கான ஒரு முறையாக அமைந்துள்ளது. இது தொடர்பில் அல் குர்ஆன் பின்வருமாறு பிரஸ்தாபிக்கின்றது.

*''அல்லாஹ் உங்களுக்கு இலகுவானதை நாடுகிறானே தவிர, உங்களுக்கு சிரமத்தை அவன் நாடவில்லை.'' (அல்-குர்ஆன் 2:185)* இவ் இறை வாசகத்திற்கு அமைவாக குறித்த சிகிச்சை நோயாளிக்கு நோய் நிவாரணியாகவும் இலவைக் கொண்டுவரும் அம்சமாகவும் உள்ளமை தெளிவாகிறது.

**IV. லாலரர வலாலிரார் (ஒருவர் தனக்குத்தான் தீங்கு விளைவித்துக் கொள்வதுமில்லை பிறருக்கு தீங்கிளைப்பதுமில்லை)**

ஒரு மனிதன் தன் கைகளால் தனக்குத் தான் தீங்கிளைத்துக் கொள்வதையும், பிற சகோதரனுக்கு தீங்கு இழைப்பதையும் இஸ்லாம் தடை செய்துள்ளது. இதற்கு சிறந்த எடுத்துக் காட்டு தற்கொலை மற்றும் கொலை ஆகும். தற்கொலை என்பது ஒருவர் தானாக வலிந்து தனக்கு மரணத்தை விளைத்துக் கொள்வதாகும். மேலும் பிற உயிர் அநீதமாக பறிக்கப்படுவதையும் இஸ்லாம் தடுத்துள்ளது.

இக்காயிதாவின் அடிப்படையில் உடலுறுப்பு மாற்றம் என்பது ஒரு நோயுற்ற மனிதனுக்கு உடலுறுப்பு மாற்று சிகிச்சையின் மூலம் தனது நோயைக் குனப்படுத்த முடியும் என்பது அறிந்தும் அவர் அதனை மேற்கொள்ள மறுப்பது தற்கொலை செய்வதற்கு நிகரானதாகும். இதே போன்று, உறுப்பு தானம் வழங்குபவரின் உயிர் பாதுகாப்பதையும் இச் சட்ட அடிப்படை உறுதிப்படுத்துன்றது.

**02. உறுப்பு தானம் என்பது இறந்த உடலை நோவினை செய்வதாகுமா?**

இறந்த உடலுக்கு இழைக்கப்படும் நோவினை உயிர் வாழ்கின்ற மனிதனுக்கு இழைக்கப்படும் நோவினைக்கு சமனானதாகும். ''இறந்த ஒருவரின் உடலிலிருந்து உறுப்புக்களைப் பிரித்தெடுப்பது இறந்த உடலுக்கு நோவினை செய்வதாகும்'' என்ற வாதம் முன்வைக்கப்படுகின்றது. இது தொடர்பாக நபி (ஸல்) அவர்களின் தெளிவான ஹதீஸூம் காணப்படுகின்றது.

*ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் ''இறந்த உடலின் எலும்பை உடைப்பது உயிருள்ள மனிதனின் எலும்பை உடைப்பதைப் போன்றதாகும்.'' (அஹ்மத், அபூதாவூத்)*

இவ்வாதம் சரியாக இருப்பினும் உறுப்பு மாற்று சிகிச்சையின் போது இவ்வாறான சித்திரவதை மேற்கொள்ளப்படுவதில்லை. இவ்வாதத்தில் நின்று நோக்கினால் இன்று மருத்துவத்துறையில் மேற்கொள்ளப்படும் அறுவைச் சிகிச்சைகள் கூட சித்திரவதையாகவே கருதப்பட வேண்டும். ஆனால் இதற்கு மாற்றமாக, இவ்வாறு மேற்கொள்ளப்படும் சிகிச்சைகள் ''உயிரைப் பாதுகாத்தல்'' என்ற ஷரீஆவின் உயர் இலக்கினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. மேலும் இது போன்ற சிகிச்சைகள் நோயாளியின் உயிர் பாதுகாக்கப்படல் வேண்டும் என்ற நிர்பந்த நிலையில் மாத்திரம் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. உலகில் முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழ்கின்ற பல நாடுகள் பிரேத பரிசோதனை மேற்கொள்வதை ''மஸ்லஹா முர்ஸலா'' அடிப்படையில் அனுமதித்துள்ளது. எனவே இதே மஸ்லஹா அடிப்படையில் உடலுறுப்பு மாற்றம் மேற்கொள்ள அனுமதி வழங்குவது பொருத்தமானது.

**03. உறுப்பு நன்கொடையாளர்கள் அவருக்கு இறைவனால் வழங்கப்பட்ட உறுப்புகளை தானம் செய்யும் போது உடலின் கண்ணியத்தைப் பாதுகாப்பதிலிருந்து தவறுவதுடன், அவருக்கு வழங்கப்பட்ட நம்பிக்கைக்கு மோசடி செய்கிறார்.**

இறைவனின் படைப்புக்கள் அனைத்திலும் மனித இனத்தை அல்லாஹ் சிறப்பித்து கண்ணியப்படுத்தியுள்ளான். இது மனித இனத்துக்கு மட்டுமே உள்ள சிறப்பாகும். இது தொடர்பில் பின்வரும் அல்குர்ஆன் வசனம் தெளிவுபடுத்துகிறது.

*''நிச்சயமாக, நாம் ஆதமுடைய சந்ததியைக் கண்ணியப்படுத்தினோம். இன்னும், கடலிலும், கரையிலும் அவர்களைச் சுமந்து, அவர்களுக்காக நல்ல உணவு(ம் மற்றும்) பொருட்களையும் அளித்து, நாம் படைத்துள்ள (படைப்புகள்) பலவற்றையும் விட அவர்களை (தகுதியால்) மேன்மைப்படுத்தினோம்.''(அல்-குர்ஆன் 17:70)*

மிகச் சிறந்த படைப்பாக மனிதனை அல்லாஹ் படைத்து கண்ணியப்படுத்தியுள்ளான். மேலும் இக்கண்ணியம் மனித உடலுக்கும் வழங்கப்பட்டுள்ளது. முஸ்லிம்களாகிய எமக்கு இறைவனிடமிருந்து அமானிதமாகவும், அன்பளிப்பாகவும் உடல் வழங்கப்பட்டுள்ளது. எனவே, உயிர்வாழ்கின்ற போதும் மரணிக்கின்றது போதும் எமது உடலுக்கான உரிமைகளையும், தேவைகளையும் வழங்க வேண்டும். உயிர்வாழ்கின்ற போது உடலுக்கு வழங்கப்படுகின்ற உரிமைகளில் உடல் சுகாதாரம் பேணல், காயங்கள் மற்றும் இதர தீங்குகளில் இருந்து பாதுகாத்தல் என்பன முக்கியமானவையாகும். அதேபோன்று இறந்த உடலுக்கான உரிமைகளில் குளிப்பாட்டல், கபனிடல், தொழுகை நடாத்தல், அடக்கம் செய்தல் போன்றன காணப்படுகின்றன.

உறுப்பு மாற்றம் இறைவனால் வழங்கப்பட்ட நம்பிக்கை மற்றும் அமானிதத்திற்கு மாற்றமான செயல் என்ற வாதம் முன்வைக்கப்படுகின்றது. உறுப்பு மாற்றத்தின் போது மனித உடல்களின் கண்ணியம் களங்கப் படுத்தப்படுவதில்லை. சிறுபான்மையாக முஸ்லிம்கள் வாழ்கின்ற நாடுகளில் வைத்தியத் துறையில் மேற்கொள்ளப்படும் பிரேத பரிசோதனை, உறுப்பு தானம், உறுப்பு மாற்றம் போன்றவைகள் "ஸியாஸியா அஸ்-ஷரஇய்யா" அடிப்படையில் அரசின் கடமையாகவும், பொறுப்பாகவும் அமைந்துள்ளது. மேலும் இது மனித உயிர்களைக் காப்பாற்றுவதற்காகப் எடுக்கும் முயற்சியாகும். இது தொடர்பில் யூஸுப் அல்கர்ளாவி அவர்கள் குறிப்பிடுகையில் "இறந்த மனிதனின் உடல் உறுப்புக்களை மாற்றம் செய்வது மனித கண்ணியத்திற்கு முரணான செயலாக அமையாது" ((ஆளைாமயா)இ 2013) என்கிறார். இன்று மேற்கொள்ளப்படும் உறுப்பு மாற்றங்கள் நவீன கருவிகளின் உதவியுடன் மேற்கொள்ளப்படுவதால் உடல்களின் கண்ணியத்திற்கு பாதகம் ஏற்படாதவாறு சிகிச்சைகள் கச்சிதமாக மேற்கொள்ளப்படுகின்றன.

**04. உறுப்பு மாற்றத்தின்போது உறுப்பை பெற்றுக் கொள்ளும் நபர் உறுப்புக்களை மாற்றம் செய்யும் நபரின் பாவங்களையும் சேர்த்தே சுமக்க வேண்டி ஏற்படுமா?**

ஒரு மனிதன் ஷரீஆ கடமைகளுக்குத் தகுதியானவனாக (Legal Capacity) மாறியதும் அவன் புரிகின்ற நன்மைகள், தீமைகள் அனைத்தும் பதிவு செய்யப்படுகின்றன. இவ்வாறு பதிவு செய்யப்படும் செயல்களுக்கு அவனே பெறுப்பாவான்.

*"பாவம் செய்யும் ஒவ்வோர் ஆத்மாவும் தனக்கே, கேட்டைத் தேடிக்கொள்கிறது ஓர் ஆத்மாவின் (பாவச்)சுமையை மற்றோர் ஆத்மா சுமக்காது. பின்னர், நீங்கள் (அனைவரும்) உங்கள் இறைவன் பக்கமே திரும்பிச் செல்ல வேண்டியதிருக்கிறது அப்போது நீங்கள் பிணங்கி விவாதம் செய்து கொண்டிருந்தவை பற்றி அவன் உங்களுக்கு அறிவிப்பான்" என்று (நபியே!) நீர் கூறும்." (அல்-குர்ஆன் 6:164)*

இவ்வசனத்தில் வரும் "ஒரு ஆத்மா மற்றைய ஆத்மாவின் பாவச் சுமையை சுமக்காது" என்பதன் மூலம் உறுப்பு மாற்றம் செய்யப்பட்ட நபர் பாவச் சுமையையும் சேர்த்து சுமக்க மாட்டார் என்பது தெளிவாகிறது. மேலும் உறுப்புக்களுக்குத் தண்டனை அளிக்கப்படுவதில்லை. மாறாக அவ்வுறுப்புக்களை கொண்டு புரிந்த பாவங்களுக்காக ஆத்மாவுக்கே தண்டனைகள் வழங்கப்படுகின்றன. மேலும் மறுமையில் குறித்த உறுப்புக்கள் சாட்சியாக நின்று சாட்சி கூறும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**05. ஒரு முஸ்லிம் முஸ்லிம் அல்லாதவரிடமிருந்து உறுப்புக்களை பெற்றுக் கொள்ள முடியுமா?, முஸ்லிம் அல்லாத ஒருவருக்கு ஒரு முஸ்லிம் உறுப்புக்களை வழங்க முடியுமா?**

இஸ்லாத்தில் உறுப்புக்களை வழங்குவதற்கும் பெற்றுக் கொள்வதற்கும் எந்தவொரு தடையும் கிடையாது. காரணம் மனித உறுப்புக்கள் முஸ்லிம், முஸ்லிம் அல்லாதவரின் உறுப்பு என்ற வேறுபாட்டுடன் இறைவன் படைக்கவில்லை. மாற்றமாக, குறித்த உறுப்புக்களைக் கொண்டு செய்யப்படுகின்ற வணக்க வழிபாடுகளே இறைநம்பிக்கையை தீர்மானிக்கின்றது.

யூஸுப் அல்கர்ளாவி அவர்கள் இது தொடர்பாக கூறும்போது *"ஒரு மனிதனின் நம்பிக்கையைக் கொண்டு, இது முஸ்லிமின் உறுப்பு: இது முஸ்லிம் அல்லாதவரின் உறுப்பு என வேறுபடுத்த முடியாது. ஆனால் குறித்த உடலின் ஆத்மாவை வேறுபடுத்த முடியும்.*

*அதனால் முஸ்லிம் முஸ்லிமல்லாதவர்களுக்கிடையே உறுப்புக்களை பரிமாற்றிக் கொள்வதில் எந்த கட்டுப்பாடும் இஸ்லாத்தில் கிடையாது.''* ((ஆளைாமயா)இ 2013)

**06. உறுப்பு மாற்றம் தொடர்பாக பிக்ஹ்நிறுவனங்களால் வழங்கப்பட்ட பத்வாக்கள்**

**I. மலேசியாவின் தேசிய பத்வா கவுன்சில் (National Fatwa Council of Malaysia)**

இஸ்லாத்தில் உறுப்பு மாற்றம் தொடர்பான கருத்தாடல்கள் 1960இல் மலேசியாவில் முதன் முதலாக தொடங்கப்பட்டது. இதன் பின் 23, 24 ஜூன் 1970இல் ''மலேசியாவின் தேசிய ∴பத்வா கவுன்சில்'' உறுப்பு மாற்றம் தொடர்பான மாநாடு ஒன்றை நடாத்தியது. இம்மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக இறந்த உடலிலிருந்து ''கண், இதயம் ஆகிய உறுப்புக்கள் மாற்றம் செய்ய முடியும். மேலும் இம்மாற்றத்தின் போது பின்வரும் நிபந்தனைகள் கவனத்தில் கொள்ள வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

1) உடலுறுப்பு மாற்றம்தான் நோயாலியின் உயிரை காப்பாற்ற ஒரே தெரிவு என்ற நிர்ப்பந்த நிலையில் மேற்கொள்ளல்.
2) மனித கொலை, உறுப்பு வியாபாரம் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு உறுப்புமாற்றம் இடம்பெறக் கூடாது.
3) இறந்த உடலிலிருந்து உறுப்புமாற்றம் இடம்பெறுமாயின் குறித்த மனிதன் மரணமடைவதற்கு முன் அவரிடமிருந்து அனுமதி பெறப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது அனுமதி பெறப்படாத உடலாக இருப்பின் அவரின் குடும்பத்திடமிருந்து அனுமதி பெறப்படல் வேண்டும்.
4) இதய மாற்றின் முன் குறித்த நபரின் மரணம் துறைசார் வைத்திய நிபுணர்களினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

பத்வா பெறப்பட்ட அடிப்படைகள் ''தீங்கு நீக்கப்படல் வேண்டும்'' (Harm Must be eliminated), ''கஷ்டம் இலகுவை கொண்டுவரும்'' (Hardship begets facility) ,''இரண்டு தீங்குளில் குறைந்த தீங்கினைத் தெரிவு செய்தல்'' (Choosing the lesser of two harms)

**II. சிங்கபூரின் மஜ்லிஸூல் இஸ்லாமியி (The Islamic Religious Council of Singapore)**

1986இல் ''The Islamic Religious Council of Singapore'' உறுப்பு மாற்று சிகிச்சைக்கு அனுமதியளிக்கும் பத்வாவை வெளியிட்டது. இவ்வனுமதி நிர்ப்பந்த நிலையில் உள்ள ஒரு நோயாளிக்காகும். குறித்த பத்வா ''நிர்பந்தத்தின் போது தடைசெய்யப்பட்டவை அனுமதிக்கப்படும்'' என்னும் காயிதாவின் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டது. இவ் பத்வா வழங்கும் முன் விழித்திரையில் உள்ள ''Cornea'' மாற்றம் செய்வதற்கான பத்வா 1995இல் வெளியிட்டிருந்தது. மேலும், 2003 மற்றும் 2004 காலப்பகுதியில் இதயம், சிறுநீரகம் என்பற்றிக்கான பத்வாக்கள் இந்நிறுவனத்தால் வெளியிடப்பட்டன.

**III. சவூதி அரேபியாவின் ஹைய்அத்து கிபாரில் உலமா (The Senior Ulama Council of Saudi Arabia)**

1967இல் ''Cornea'' மாற்றுக்கு அனுமதி வழங்கும் பத்வாவை வெளியிட்டது. மேலும் 1982இல் இறந்த உடலிலிருந்து உயிருள்ள உடலுக்கு உறுப்புக்கள் மாற்றம் செய்யும் பத்வாவை வெளியிடப்பட்டது.

**IV. மஜ்மஉல் பிக்ஹில் இஸ்லாமி (Majm'al Fiqh al-Islami)**

சவூதி அரேபியாவின் ஜித்தா நகரில் 11 பெப்ரவரி 1988ஆம் ஆண்டு இடம்பெற்ற நான்காவது மாநாட்டில் உறுப்பு மாற்றிற்கு அனுமதியளிக்கும் பத்வா பின்வரும் நிபந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்டது.

1. நோயாளியின் உயிரை காப்பதற்கான இறுதித் தெரிவாக உறுப்பு மாற்றம் இருத்தல்
2. மரணித்த நபரிடமிருந்து உறுப்புக்கள் பெறப்படுமாயின் குறித்த நபரின் முன் அனுமதி பெறப்பட்டிருத்தல்.
3. முன் அனுமதி பெறப்படாவிடின் உறவினர்களின் அனுமதி பெறப்படவேண்டும். உறவினர்கள் இல்லாவிடின் முஸ்லிம் சமூக தலைவரிடமிருந்து அனுமதி பெறப்படல் வேண்டும்.
4. உறுப்பு வியாபாரம், உறுப்புக் கடத்தல் போன்ற இஸ்லாம் தடைசெய்த விடயங்களுக்காக உறுப்பு மாற்றம் இடம்பெறக் கூடாது.

17 ஒக்டோபர் 1987 இல் இடம்பெற்ற மாநாட்டில் மூளைச் சாவு (Brain Death) என்பது ஒரு மனிதன் மரணமடைவதற்கு நிகரானது. மேலும் மூளைச் சாவு அடைந்த நபரின் உடலுறுப்புக்கள் உறுப்பு மாற்றம் செய்ய முடியும் என்ற பத்வாவையும் வெளியிட்டது.

**V. இந்தியாவின் மஜ்மஉல் பிக்ஹில் இஸ்லாமியி (Majma’ al- Fiqhi al-Islami al-Hind)**

இந்தியா வாழ் முஸ்லிம்களிடையே தோன்றும் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் நோக்கில் நிறுவப்பட்டது. இது 1989இல் புதுடில்லியில் இடம்பெற்ற மாநாட்டில் நிர்பந்த நிலையில் உறுப்பு மாற்று மேற்கொள்ள முடியும் என பத்வா வெளியிட்டது.

**VI. அமெரிக்காவின் மஜ்லிஸுˢ புகஹாஉஸ் ஷரீஆ (The Islamic Shari’ah Council, United States of America)**

1995இல் அமெரிக்காவில் உள்ள இஸ்லாமிய ஷரீஆ கவுன்ஸில் நோயைக் குணப்படுத்தும் நோக்கிலும், உயிர்களைக் காப்பாற்றும் நோக்கிலும் உறுப்பு மாற்று சிகிச்சை மேற்கொள்வது ‘‘நிர்ப்பந்த நிலையில் தடுக்கப்பட்டவை ஆகுமாகும்’’ என்ற காஇதாவின் அடிப்படையிலும், உயிர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற ஷரீஆவின் உயர்ந்த இலக்குகளின் அடிப்படையிலும் அனுமதிக்க முடியும் என்ற பத்வாவை வெளியிட்டது.

**VII. ∴பத்வா மற்றும் ஆராய்ச்சிக்கான ஐரோப்பிய கவுன்சில் (European Council for Fatwa and Research (ECFR))**

2000ஆம் ஆண்டு உடலுறுப்பு மாற்றத்திற்கு அனுமதியளிக்கும் பத்வாவை வெளியிட்டது. இதன் Resolution No. 54 (5/6) மூலம் ‘‘மூளை திசுக்கள் மற்றும் நரம்பு மண்டலத்தின் மாற்று சிகிச்சை (Transplant of Brain Tissues and Nervous System)’’ அனுமதி வழங்கியதுடன் Resolution No. 57 (8/6) இன் மூலம் ‘‘பிறப்புறுப்பு உறுப்புகளின் மாற்று சிகிச்சையை (Transplant of Genital Organs)’’ தடை செய்தது. (Zubair, 2015)

## முடிவுரை (Conclusion)

உடலுறுப்பு மாற்றம் 19ஆம் நூற்றாண்டில் மருத்துவத்துறையில் ஏற்பட்ட புதிய புரட்சியாக இருப்பினும் இஸ்லாம் எல்லா கால, சூழலுக்கும் பொருத்தமானது என்பதை நிரூபிக்கும் வகையில் குறித்த பிரச்சினைக்கு தெளிவான அடிப்படைகளில் இருந்து இஜ்திஹாத் மூலம் பத்வாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இஸ்லாத்தில் உடலுறுப்பு மாற்றம் மேற்கொள்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வனுமதி நிர்ப்பந்த நிலையில் இறுதித் தெரிவு, குறித்த சிகிச்சை மூலம் நோயாளியின் உயிர் காப்பாற்ற முடியும் என்ற உத்தரவாதம் நிபுணத்துவம்

பெற்ற மருத்துவர்களினால் வழங்கப்பட்டிருத்தல் போன்ற நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் அவசியமாகும். இலங்கையில் உறுப்புமாற்றம் மேற்கொள்வதற்கு பொதுச் சட்டம் அனுமதி வழங்கியுள்ளதுடன் சிங்கபூர், மலேசியா, அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் இயங்கும் பிக்ஹ் நிறுவனங்களின் பத்வாக்கள் தெளிவான கவாயித்களின் அடிப்படையில் உறுதியானதாக உள்ளமை ஆய்வின் முடிவாகும்.

### ஆலோசனைகள் (Recommendations)

1. இலங்கையில் நடைமுறையில் சட்டங்களும், நெறிமுறைகளும் ஐக்கிய அமெரிக்காவில் நடைமுறையில் உள்ள சட்டங்களுக்கும், நெறிமுறைகளுக்கு அமைவாக மாற்றியமைப்பதன் மூலம் இலங்கையில் உறுப்பு தானம், உறுப்பு மாற்றம் தொடர்பில் மக்கள் பங்கு பற்றுதலை அதிகரிக்க முடியும்.
2. இலங்கையில் உள்ள பத்வாக்குழுக்களும், ஜம்யிய்யதுல் உலமா சபையும் இது தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டல் பத்வாக்களை வெளியிடுதல்.
3. இலங்கையில் உள்ள 1987ஆம் ஆண்டு 48ஆம் இலக்க மனித திசு மாற்றுச் சட்டம் (Transplantation of Human Tissue Act No 48 of 1987) சில மாற்றங்களைக் கொண்டுவந்து உறுதிப்படுத்தல்.
4. இலங்கை இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடத்தில் இது போன்ற ஷரீஆ தொடர்பாக தோன்றும் நவீன பிரச்சினைகள் பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளவும், இஜ்திஹாத் மேற்கொள்வதற்கும் என ஒரு குழு உருவாக்கப்படல்.
5. இஸ்லாமிய உலகில் உள்ள பிக்ஹ் நிறுவனங்கள் போன்று இலங்கை உலமாக்கள் சபை தரம் உயர்த்தப்படல் வேண்டும்.
6. நவீன மார்க்கப் பிரச்சினைகள் தொடர்பான தனியான ஆய்விதழ் ஒன்று வெளியிடப்படல் வேண்டும்.

### உசாதுணைகள்:


Administration, H. R. (2020, October 22). *Organdonor.gov*. Retrieved from U.S. Government Information on Organ Donation and Transplantation: https://www.organdonor.gov/about-dot.html

Albar, M. (2012). Organ Transplantation: A Sunni Islamic Erspective. *Soudi Journal of Kidney Diseases and Transplantation* , p.23-36.

Bakari, A. A. (2012). Organ Transplantation: Legal, Ethical and Islamic Perspective in Nigeria. *Nigerian Journal of Surgery*, 53-60.

E-Paper, D. N. (2017, Febrary 2). *CARE to SHARE : Organ donation, saving lives*. Retrieved from www.dailynews.lk: http://www.dailynews.lk/2017/02/02/features/106424/care-share-organ-donation-saving-lives

Hamdy, S. (2014, january 01). Our Bodies Belong to God: Organ Transplants, Islam, and the Struggle for Human Dignity in Egypt By SHERINE HAMDY. *Journal of Islamic Studies, Volume 25, Issue 1*, Pages 98–103. Retrieved from Our Bodies Belong to God: Organ Transplants, Islam, and the Struggle for Human Dignity in Egypt By SHERINE HAMDY: https://doi.org/10.1093/jis/ett064

Hamilton, D. (2012). *A History of Organ Transplantation: Ancient Legends to Modern Practice.* United States of america: University of Pittshuryh Press.

MCS. Shathifa, S. &. (2015). அறபு ஒலிகளுக்கான தமிழ் வரிக்குறியீடுகளை உருவாக்குதல். *Second International Symposium-2015, FIA,SEUSL* (p. 128). Ouvil, Sri Lanka: Second International Symposium-2015, FIA,SEUSL.

Mishkah, I. U. (2013). *Al-Qawa'id Al-Fiqhiyyah (Legal Maxims of Islamic Jurisprudence: A Translated Compilation).* North America : Islamic University of North America (Mishkah) Islamic Studies English Programe .

Raysuni, A. A. (2012). *As-Shura: The Quranic Principle of Consultation .* London . Washington: The International Institute of Islamic Thought, London . Washington.

Shimazonoa, Y. (2019). *Public health reviews: The state of the international organ trade: a provisional.* England: Institute of Social and Cultural Anthropology, University of Oxford, Oxford, England.

Vadysinghe A.N, D. P. (2018). Tissue Donation and Transplantation Program in Sri Lanka: A Medico-Legal Point of View. *Sri Lanka Journal of Forensic Medicine, Science & Law*, Vol.9 No.1.

Yousufi, N. (2016, March 14). *உடலுறுப்பு தானம்- இஸ்லாமிய பார்வை* . Retrieved from www.blogspot.com: http://nizamudden-yousufi.blogspot.com/2016/10/blog-post_77.html

Zubair, M. M. (2015). *Organ Donation and Transplantation: An Opinion.* UK: Institute of Islamic Jurisprudence, Bradford.

மன்ஸூர், எ. (2017). *முஸ்லிம் தனியார் சட்டம்: சில அவதானங்கள்.* colombo.

ஜான், ட. ம. (2005, Febrary 12). *tamililquran*. Retrieved from www.tamililquran.com: http://www.tamililquran.com/